**ISSN : *2456-821X*** **அவையம் 1 (2) 2017 P.No. : *48 - 54***

புதிய அவையம்

==========================================================================

## நாட்டார் தெய்வ வழிபாட்டில் திருப்பத்தூர் வட்டார நடுகற்கள்

*முனைவர் க. மோகன்காந்தி*
*உதவிப் பேராசிரியர்*
*தமிழ்த்துறை,*
*தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி),*
*திருப்பத்தூர் - 635 601*

***கட்டுரை பெறப்பட்டது: 30.11.2017*** ***ஏற்கப்பட்டது : 18.12.2017***

==========================================================================

*முன்னுரை*

*ஈராயிரம் ஆண்டுகள் பழமையுடைய தமிழ்ப் பண்பாட்டில் தெய்வ நம்பிக்கை என்பதும் ஒன்று. தொடக்க நிலையில் இயற்கை மற்றும் அச்சம் தருவனவற்றை வணங்கிய தமிழர் காலப் போக்கில் தம்மோடு வாழ்ந்து, தமக்காக உயிர் நீத்தவர்களை வணங்கத் தலைப்பட்டனர். தம்மோடு வாழ்ந்து மறைந்த மனிதர்களைக் கல்வட்டங்கள், கற்திட்டைகள், தாழிகள் மூலம் அடக்கம் செய்து, பிறகு அவர்கள் இறந்த இடத்தில் உயார்ந்த குத்துக்கற்களை நட்டு வழிபட்டனர். கால வளர்நிலை மாற்றத்தில் குத்துக்கற்கள் நடுகற்களாக மாறி இறந்த வீரனின் உருவம், எதற்காக இறந்தான்? என்பதை வெளிப்படுத்தும் கல்வெட்டுகள் ஆகியவற்றைக் கொண்டு இறந்த வீரனைச் சிறப்புச் செய்தனர். அதற்கும் ஒருபடி மேல் சென்று இறந்த வீரனைத் தெய்வமாக்கி வணங்கினர். இத்தகு சிறப்புக் கொண்ட இவ்வாய்வுக் கட்டுரை திருப்பத்தூர் வட்டாரத்தில் காணலாகும் நடுகற்களைப் பாடுபொருளாகக் கொண்டு அமைகிறது.*

### திருப்பத்தூர் வட்டார நடுகற்கள்

*திருப்பத்தூர் ஆதியுர் முதல் கோடியுர் வரையிலான ஊர்களைக் கொண்டதால் திருப்பத்தூர் எனப் பெயர் பெற்றது என்பர். தற்போதைய சூழலில் பல சிற்றூர்கள் சூழ்ந்த பகுதியாகத் திருப்பத்தூர் விளங்குகிறது. திருப்பத்தூரைச் சூழ்ந்திருக்கக் கூடிய பல*

புதிய அவையம்

சிற்றூர்களின் நடுகற்கள் வழிபடு கடவுளாக உள்ளன. நடுகற்கள் முறையே வேடியப்பன், போத்தராஜா, இராமர் சிலை, கல்லுசாமி, செலகாரன் கல் போன்ற பெயர்களில் வணங்கப்படுகின்றன. சோழர் காலம் தொட்டு விஜயநகர காலம் வரையிலான நடுகற்கள் இப்பகுதிகளில் காணலாகின்றன. இந்நடுகற்களை இவ்வுர் மக்கள் குலதெய்வம், எல்லை தெய்வம், காவல் தெய்வங்களாக ஊரின் புறத்தே வைத்து வாரம், ஆண்டு என்று தங்கள் வசதிக்கேற்றாற் போல வழிபடுவதை அறிய முடிகிறது.

***திருப்பத்தூர் வட்டாரத்தின் புவியியல் அமைப்பு***

திருப்பத்தூர் வட்டாரம் வேலூர் மாவட்டத்தின் மேற்குத் திசையில், மாவட்ட எல்லையாக அமைந்துள்ளது. வடகிழக்கு மற்றும் கிழக்குத் திசையில் முறையே ஏலகிரி மற்றும் ஜவ்வாது மலைகளும் தெற்கில் கிருட்டிணகிரி மாவட்டமும் மேற்கில் ஆந்திர மாநிலமும் வடக்கில் வாணியம்பாடியும் அமைந்துள்ளன.

திருப்பத்தூர் பகுதி திணைநிலை அடிப்படையில் மேட்டுநிலப்பகுதி என்பதால் இதை முல்லைநிலப் பகுதி எனலாம். இவ்வுரைச் சுற்றி ஏலகிரி, ஜவ்வாதுமலை, சந்திரபுரமலை, பைனம்பள்ளி மலை போன்ற மலைகள் சூழப்பெற்றுள்ளன.

திருப்பத்தூர் பகுதி மேட்டுநிலப்பகுதி என்பதால் வானம் பார்த்த புமியாக உள்ளது. இங்கு வாழும் மக்களுக்கு வேளாண்மையும் ஆநிரை வளர்ப்பும் முக்கியத் தொழில்களாக உள்ளன. முல்லை நிலத்தின் அடையாளம் ஆநிரை வளர்ப்பு ஆநிரைகளைக் பகைவர்கள் கவர்ந்து செல்வதும், ஆநிரைக்குரியோர் மீட்பதும் வெட்சி, கரந்தை என்று தமிழ் இலக்கண, இலக்கியங்கள் கூறும். போரின் தொடக்க நிலையான வெட்சி, கரந்தை போரில் தம் ஆநிரைகளை மீட்டு உயிர்விட்ட வீர மறவர்களுக்கு நடப்படும் வீரத்தின் அடையாளமே நடுகற்களாகும்.

ஆநிரைகளை மையப்படுத்திப் போர்கள் நடந்ததால் இறந்த வீர்ர்களுக்கு நடுகல் நட்டு வணங்கியுள்ளனர். அதன் நீட்சி இன்றுவரை திருப்பத்தூரைச் சுற்றியுள்ள நாட்டுப்புற மக்களால் பாதுகாக்கப்பட்டு வணங்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

***1. கேதாண்டப்பட்டி நடுகல்***

திருப்பத்தூர் அருகேயுள்ள ஜோலார்ப்பேட்டையிலிருந்து நாட்றம்பள்ளிக்குச் செல்லும் 5-வது கி.மீட்டர் தூரத்தில் உள்ளது கேத்தாண்டப்பட்டி. கேத்தாண்டப்பட்டியிலிருந்து மோட்டூருக்குச் செல்லும் வழியில் இரண்டு நடுகற்கள் உள்ளன. ஒன்று வீரனுக்கும் மற்றொன்று காளை மாட்டிற்கும் வைக்கப்பட்டுள்ளன. முதல்

*நடுகல் 4 அடி உயரம் கொண்டதாக உள்ளது. இந்நடுகல் வீரன் கையில் வில் அம்புடன் காட்சித்தருகிறார். தலை கொண்டையிட்டு வாரப்பட்டுள்ளது. இதில் எழுத்துக்கள் உள்ளன. ஆனால் அவற்றை முழுமையாகப் படிக்க இயலவில்லை. முதல் வரி ஸ்வஸ்திஸ்ரீ குலோத்துங்க சோழ தேவர்க்கு என்று தொடங்குகிறது. எனவே இந்நடுகல் பிற்காலச் சோழர் குலத்தைச் சேர்ந்த குலோத்துங்கனின் கி.பி.11-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த நடுகல் என்பது உறுதியாகிறது. இரண்டாவது நடுகல் 4 அடி உயரத்தில் உள்ளது. அழகாக வரிகள் இட்டு எழுதப்பட்டுள்ளது. எழுத்துக்களைச் சரியாகப் படிக்க இயலவில்லை. இந்நடுகல்லில் அழகிய திமிலுடன் கூடிய, காளை மாட்டின் உருவம் வடிவமைக்கப்பட்டுள்ளது. அருகில் சூலாயுதமும் உள்ளது.*



*“இவ்விரண்டு நடுகற்களையும் இவ்வூர் மக்கள் வணங்குவதில்லை. ஆனால் ஏலகிரி மலையிலுள்ள நிலாவூர் அத்தனாவூரைச் சேர்ந்த மலைவாழ் மக்கள் சித்திரை மாதங்களில் தங்கள் ஆநிரைகளோடு இந்நடுகற்கள் இருக்கும் இடத்திற்கு வந்து வெற்றிலை, பாக்கு, பொறி, கடலை வைத்து இத்தெய்வங்களுக்கு படைக்கின்றனர். பின்னர் பத்தடிக்கும் மேல் இடைவெளிக் கொண்ட இரண்டு நடுகற்களுக்கும் இடையில் மாடுகளை அழைத்துச் செல்வர். இதன் மூலம் தங்களுடைய மாடுகளுக்கு நோய்கள் வராது என்பது இவர்களின் நம்பிக்கை. மேலும் சித்திரை மாதத்தில் புத்திருக்கும் உவர் மண்ணையும் மாடுகளை உண்ண வைப்பர்”[1] என்று கிருஷ்ணன் கூறுகிறார். இதன் மூலம் ஆநிரைகளுக்கும் நடுகற்களுக்கும் இடையே உள்ள தொடர்பு தெளிவாகத் தெரிகிறது.*

***2. வேடியப்பன் நடுகற்கள்***

*திருப்பத்தூரிலிருந்து ஜோலார்ப்பேட்டைச் செல்லும் 3-வது கிலோ மீட்டர் தூரத்தில் பால்னாங்குப்பம் அமைந்துள்ளது. இந்நடுகல் பால்னாங்குப்பத்தில் உள்ள பால்காரத் துரைசாமி வட்டத்திலுள்ளது. கி.பி 10-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பிற்காலச் சோழர் கால நடுகல் என்று கருதப்படுகிறது.*

*இந்நடுகல் ஆநிரைப் போர் (அ) எல்லைப் போரில் உயிர் நீத்த சிற்றரசனுக்கு எடுக்கப்பட்ட நடுகல்லாகும். இச்சிலை கிழக்குப் பார்த்த நிலையில் உள்ளது. 4½ அடி உயரமும் 4½ அகலமும் கொண்டதாக உள்ளது. இந்நடுகல் வீரன் போர்க்கோலத்தோடு காட்சி தருகிறார். இடது கையில் பெரிய வில்லும் வலது கை மார்பின் மீதும் உள்ளன. கைவிரல்கள் நேர்த்தியுடன் செதுக்கப்பட்டுள்ளன. இடுப்பில் உறைவாள் ஒன்று உள்ளது. தலைக் கொண்டை வலதுபுறம் இருபகுப்பாக வாரி முடிக்கப்பட்டுள்ளது. கால்களில் வீரக்கழல்கள் உள்ளன. இவ்வீரன் அரசன் என்பதற்குச் சான்றாகத் தலையில் 'கிரீடம்'உள்ளது. மேலும் மார்பில் சன்ன வீரம் அணிந்திருக்கிறார். தலைக்கு மேலாகப் 'புமாரி' பொழிவது போல் செதுக்கப்பட்டுள்ளது. இவை அரசர்களுக்கான குறியீடுகள் என்பதைத் தெளிவாக உணரலாம்.*



*இந்நடுகல்லை இவ்வுர் மக்கள் வேடியப்பன் என்ற பெயரில் வணங்குகின்றனர். ஆண்டுதோறும் சித்திரை, வைகாசி மாதங்களில் ஆடு, கோழி ஆகியவற்றைப் பலியிட்டுப் பொங்கல் வைக்கின்றனர். வாரந்தோறும் வெள்ளிக்கிழமைகளில் வெற்றிலைப் பாக்கு, பு, பழம் வைத்தும் வணங்குகின்றனர். இத்தெய்வத்தைப் புதூர் பகுதியைச் சேர்ந்த வன்னியர், ரெட்டியார், போயர், வண்ணார்; ஆகிய சாதியினர் வணங்குகின்றனர்.*

***ஆ. மல்லப்பள்ளி நடுகற்கள் (3)***

*புதுப்பேட்டையில் இருந்து 5 கி.மீ தொலைவில் உள்ளது மல்லப்பள்ளி சிற்றூர். இவ்வூரின் புறத்தே காட்டுப் பகுதியில் வேடியப்பன் கோயில் உள்ளது. இக்கோயிலில் 5 கற்சிலைகள் உள்ளன. 3 நடுகற்கள் 2 பெண்கள் அமர்ந்திருக்கும் சிற்பங்கள் உள்ளன. கோயிலின் இடது புறத்தில் உள்ள நடுகல் அரசனுக்கான நடுகல்லாகத் தெரிகிறது. பெரிய மீசையுடன் கழுத்தில் பல ஆபரணங்கள் உள்ளன. காதுகளில் காதணியும், தலையில் கிரீடமும் காட்சித் தருகின்றன. தலை இடதுபுறமாக கொண்டையிடப்பட்டுள்ளது. கால்களில் வீரக்கழல்கள் உள்ளன. அழகான ஆடை, ஆபரணங்கள் இடையில் உள்ளன. இடைக் கச்சில் குறுவாள் ஒன்று உள்ளது. வலது கையில் வில்லுடன் அம்பும் உள்ளது. இடது கையில் வாள் ஏந்தியபடி இவ்வீரன் காட்சி தருகிறார்.*

*நடுவில் நிற்கும் இரண்டாவது நடுகல் கொண்டையிடப்பட்டத் தலையுடன் இடுப்பிலுள்ள குறுவாள் மேல் வலது கை வைத்துள்ளது. இடது கையில் வில் காணப்படுகிறது. மூன்றாவது நடுகல் இடதுபுறம் வாரிய கொண்டையுடன் இடது கையில் வில் ஏந்தியபடி உள்ளது. வலது கை குறுவாளைப் பிடித்துள்ளது. இடையில் அழகான ஆடை காணப்படுகிறது. இம்மூன்று நடுகற்களும் முறையே சோழர், ஒய்சாளர் மற்றும் விஜயநகர காலத்தைச் சேர்ந்த நடுகற்களாகும். மூன்று நடுகற்களும் வெவ்வேறு காலத்தைச் சேர்ந்தவை என்றாலும் இப்பகுதியில் தொடர்ச்சியாக போர்கள் நடந்துள்ளதை அறிய முடிகிறது. மாரியம்மனுக்குக் கூழ் வார்க்கும் போது, மக்கள் இக்கோயிலுக்குச் சென்று பொங்கலிட்டும் ஆடு, கோழிகளை பலியிட்டும் வணங்குகின்றனர். இவ்வுர் மக்கள் நடுகல் வழிபாட்டைப் போற்றிப் பாதுகாப்பது சிறப்புக்குரியதாகும்.*

**இ. கோணாப்பட்டு நடுகல்**

*திருப்பத்தூரிலிருந்து புதுப்பேட்டைக்குச் செல்லும் வழியில் 4-வது கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது கோணாப்பட்டு கிராமம். இவ்வூரில் உள்ள ஏரிக்கரைக்கு அருகாமையில் கி.பி 12-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சோழர் காலத்து நடுகல் ஒன்று காணலாகிறது. கோணாப்பட்டு ஊரின் பெயரைக் கோன்+ஆன்+பட்டு என்று பிரித்தால் கோன் அரசன் (அ) இனக்குழுத் தலைவன், ஆன் - கால்நடைக்காக, பட்டு – போரிட்டு இறந்த ஊர் என்று பொருள் கொள்ள முடிகிறது. எனவே ஆநிரைப் போரில் இறந்த வீரனுக்கு எடுக்கப்பட்ட நடுகல் என்று கருதலாம். இவ்வுர் மக்கள் இந்நடுகல்லை வேடியப்பன் என்ற பெயரில் அழைக்கின்றனர். ஆண்டுக்கொரு முறை ஊர் மக்கள் கூடி வெகு விமரிசையாக வேடியப்பனுக்கு விழா எடுக்கின்றனர். இத்தெய்வ வழிபாடு நாட்டுப்புற மக்களிடம் நடுகற்கள் பெற்றுள்ள செல்வாக்கினை எடுத்துரைக்கின்றன.*

***3. ஏறுதழுவல் நடுகல்***

*திருப்பத்தூரிலிருந்து மூக்கனூர் வழியாக நாட்றம்பள்ளி செல்லும் வழியில் 6-வது கி.மீட்டர் தூரத்தில் உள்ளது அம்மாணங்கோயில் என்னும் சிற்றூர். இவ்வூரிலுள்ள ஏரிக்கரையில் இரட்டைப் பனைமரத்தடியில் வரலாற்றுச் சிறப்புமிக்க ஏறுதழுவல் நடுகல் ஒன்று காணலாகிறது. 3½ அடி அகலமும் 4 அடி உயரமும் கொண்டதாக இந்நடுகல் உள்ளது. ஆநிரைக்காக உயிர்விட்ட வீரர்களுக்கு நடுகல் எடுத்துள்ளதைப் போல, தங்களோடு வாழும் ஆநிரைகளோடு போரிட்டு வென்ற வீரனுக்கும் நடுகல் வைத்துள்ள செய்தியை இங்கு அறிய முடிகிறது.*

*இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே சங்க இலக்கியத்தில் ஏறுதழுவல் விளையாட்டு, பெருவழக்கில் இருந்துள்ளது. அவ்வகையில் விஜயநகரக் காலத்தைச் சேர்ந்த கி.பி 15-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த அதாவது 500 ஆண்டுகளுக்கு முற்பட்ட ஏறுதழுவல் (அ) ஜல்லிக்கட்டு (அ) மஞ்சுவிரட்டு (அ) மாடுபிடி சண்டை என்று கூறத்தக்க வகையிலான நடுகல் கிடைத்திருப்பது சிறப்புக்குரிய ஒன்றாகும்.*



*இந்நடுகல் வீரன் கொண்டையிட்டு, கழுத்தில் ஆபரணங்களை அணிந்து காணப்படுகிறார். இவரது வலது கையில் ஜாட்டைப் போன்ற ஆயுதம் காணப்படுகிறது. இது காளையை அடக்கியதற்கான குறியீடாகும். மேலும் இடது கை மாட்டின் கொம்புகளைப் பிடித்துள்ளது. வீரனின் இடது கால் மாட்டின் மேல் உள்ளது. மாடு மண்டியிட்டு அமர்ந்துள்ளது. இது மாட்டை அடக்கியதற்கான சான்றாகும். இந்நடுகல்லில் எழுத்துக்கள் உள்ளன. ஆனால் அவை சிதைந்த நிலையில் உள்ளன. இந்நடுகல்லை இவ்வூர் மக்கள்*

‘போர்த்தராஜா’என்னும் பெயரில் வழங்குகின்றனர். ஆண்டுக்கு ஒருமுறை அம்மனுக்குக் கூழ் வார்க்கும் போது இந்நடுகல்லை பலியிட்டு படையல் தந்து வணங்குகின்றனர். இது சக்தியுடைய தெய்வமாக இவ்வுர் மக்களால் வழிபடப்படுகிறது.

**முடிவுரை**

தமிழகத்தில் தருமபுரி, கிருட்டிணகிரி, திருவண்ணாமலை மாவட்டங்களுக்கு அடுத்தபடியாக வேலூர் மாவட்டத்தில் நடுகல் வழிபாடு மிகுந்திருப்பதை அறிய முடிகிறது. தம்மோடு வாழ்ந்து மறைந்த பெரும் வீரர்களைத் தம் இனக்கடவுளாகப் போற்றும் மரபு தமிழரிடம் இருந்துள்ளதை அறிய முடிகிறது. மேலும் இந்நடுகற்கள் சக்தியுடைய கடவுள்களாக நாட்டுப்புற மக்களால் வணங்கப்படுவதையும் அறிய முடிகிறது. ஊரின் புறத்தேயுள்ள காட்டுப்பகுதியில் அச்சந்தரக்கூடிய இத்தெய்வங்களுக்குக் குருதி படையலிட்டு, ஊர் மக்களின் ஒருவரே புசாரியாக இருப்பது, தமிழரின் தொன்றுதொட்டு வரும் பாரம்பரியப் பண்பாட்டை விளக்குவதாக உள்ளது.

**அடிக்குறிப்பு**

1. கிருஷ்ணன் (75), வக்கீல் குமாஸ்தா, கேதாண்டப்பட்டி, தகவலாளர் பட்டியல்
2. காணிநிலம் மு.முனிசாமி (75), அமிர்தாலயா கல்வியியல் கல்லூரி
3. மதன்குமார் வ (32), ஆங்கிலத் துறைப் பேராசிரியர், தூய நெஞ்சக் கல்லூரி, திருப்பத்தூர்.
4. ஆனந்தன் (35), நூலகப்பணியாளர், தூய நெஞ்சக் கல்லூரி, திருப்பத்தூர்.
5. ஜோதிலட்சுமி, சி (32), மருதர் கேசரி ஜெயின் பெண்கள் கல்லூரி, வாணியம்பாடி
6. பிரசாந்த் (17), மாணவர், தூய நெஞ்சக் கல்லூரி, திருப்பத்தூர்.
7. மா. காந்தி (65), மேனாள் காப்பாட்சியர், வேலூர், அருங்காட்சியகம்.
8. முனைவர் ர.புங்குன்றன், தமிழ்நாடு தொல்லியல் துறை (ஓய்வு), கோவை.